# கூட்டுறவு சமூக ஆவணங்களை எண்ணிமப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

கூட்டுறவு சமூகமானது புராதான காலம் தொடங்கி இன்றுவரை அபிவிருத்திக்குட்பட்டு வந்த போதிலும் தனக்கே உரித்தான கூட்டுறவின் கொள்கைகள் மற்றும் நற்பண்புகளை கொண்ட தொகுதியினை கொண்டுள்ள ஒரு அமைப்பாக காணப்படுகின்றது. இது சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டும் உள்ளது. குறித்த கூட்டுறவின் கொள்கைகள் மற்றும் நற்பண்புகளை உள்ளடக்கியதுமாக காணப்படுகிறது.

மேலும் வடக்கு மாகாணத்தில் நிலைபேறான சமூக பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்கின்ற சக்தி வாய்ந்த நிறுவனமாக கூட்டுறவுத்துறை மிக நீண்டகாலமாக தன்பணியை புரிந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## செயற்றிட்ட நோக்கம்

பரந்தளவில் காணப்படும் இக் கூட்டுறவு சமூக அமைப்பானது நீண்டதொரு வரலாற்றினை கொண்டுள்ளதுடன் பல வெளியீடுகளையும் வெளியிட்டுள்ளது

குறிப்பிடத்தக்கது. மேலும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் அமைந்துள்ள இடங்கள் பல அரச ஆவணங்களை சேகரித்து வைத்திருக்கும் இடங்களாகவும் காணப்படுகின்றன. ஆகவே இவ்வமைப்புக்களில் காணப்படும் ஆவணங்களை ஆவணப்படுத்தி எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டத்தின் காலவரையானது ஆவணங்களின் பக்க எண்ணிக்கை அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இக்காலப்பகுதிக்குள் கூட்டுறவு சமூகங்களது ஆவணங்கள் அனைத்தும் பட்டியலிடப்பட்டு , எண்ணிமப்படுத்தப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு உலகில் உள்ள அனைவருக்கும் இலவச அணுக்கத்திற்கு வழங்கப்படும்.

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132